www.tamilarangam.net

அன்பிற்குரிய புரட்சித் தோழர்களுக்கு,

இப் புரட்சிகரப் புதிய இயக்கம் அமைக்க நாம் ஏன் தள்ளப்பட்டோம் என்பதை, EROS இன் நீண்டநாள் அங்கத்தவர் என்ற வகையில் எம்முடன் தோளோடு தோள் நின்று ஈழவிடுதலைப் புரட்சிக்காக அயராது உழைத்த உங்களுக்கு இதைத் தெளிவுபடுத்த வேண்டியது எமது கடமை. இப் புரட்சிகரப் புதிய இயக்கம் அமைப்பதற்கு, EROS தலைமைப் பீடத்தின் (LONDON) ஈழவர் புரட்சியை மழுங்கடிக்கும் போக்குகளே காரணம். அவற்றை கீழே விபரமாகத் தருகின்றோம்.

தத்துவார்த்த அரசியல் அமைப்புத் துறையில் சரியான அணுகுமுறையை வகுக்காமல் இருப்பது. அரசியல் கோட்பாட்டுப் பிரச்சினைகளைத் தீர்த்து வழிகாட்டல் தர இயலாமல் இருப்பது. இயக்கத்தை வழி நடத்திச் செல்வதிலும், இயக்கம் முழுவதும் மக்களுக்கு புரட்சிகரத் தலைமை அளிப்பதிலும் முடியாமல் இருப்பது. எந்த வழியில் புரட்சியை முன்னெடுத்துச் செல்வது என்று தெளிவாக வரையறுக்காதது. அரசியல் ரீதியிலும், அமைப்பு ரீதியிலும் மையப்படுத்தாமல் இருப்பது. ஈழத்தில் இயங்கிய அமைப்பு, ஒரு தெளிவான இலக்கை நோக்கி தங்கள் வேலைகளை முன்தள்ளிச் செல்ல இயக்கத் தலைமை ஒரு தெளிவான திட்டம் வகுக்காதது. ஈழத்து அமைப்பு ஆங்காங்கே தற்காலிக திட்டங்களை வகுத்து செயல்படும் நிலையில் இருப்பது. இலண்டன் அமைப்புத் தோழர்களுக்கும் ஈழ அமைப்புத்தோழர்களுக்கும் முரண்பாடு இலண்டன் அமைப்புத் தோழர்களுக்கும் இந்திய அமைப்புத் தோழர்களுக்கும் முரண்பாடு. இந்திய, இங்கிலாந்து தோழர்களுக்குள்ளும் முரண்பாடு. இவை யாவும் இயக்க உறவுகளைச் சீர்குலைத்துள்ளது. ஈழ அமைப்புத் தோழர்கள் மக்கள் திரள் அமைப்புக்களைத் தொடங்கி, அவர்கள் மேற்கொள்ளும் வழியில் தொடர்ந்து செல்ல வலியுறுத்தும்போது, இலண்டன் அமைப்பு அதை நெறிப்படுத்த முடியாமற் போயிருப்பது இவற்றால் இலண்டன் அமைப்பும் ஈழ அமைப்பும் சேர்ந்து இயக்கத்தை கட்டும் முயற்சி தோல்வியில் முடிந்தது.

கடந்த இரண்டரை ஆண்டுகால வேலைகளை யதார்த்தமான முறையில் பரிசீலித்து அனுபவங்களை தொகுத்து பகுத்தறிந்து பார்க்கும்போது இலண்டன் தோழர்கள் பாரதூரமான பாதிப்புகளை, தவறுகளை ஏற்படுத்தியுள்ளது தெரிகின்றது. மிகவும் சாதகமானதொரு சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு இயக்கம் முழுவதும் நிலவிய புரட்சி உத்வேகத்தையும் (இந்தியா, இங்கிலாந்து தவிர), நம்பிக்கையையும் மேலும் மேலும் வளர்த்தெடுத்து இயக்கத்தை வழி நடத்திச் செல்லத் தவறியது. இயக்கத்தை நெருக்கடி மற்றும் தேக்கநிலைக்கு இட்டுச் சென்றது. புரட்சிகர உத்வேகத்தையும், நம்பிக்கையையும் சிதறடித்தது. அமைப்பு முழுவதும் மந்தநிலையையும், சோர்வையும், விரக்தியையும், ஊசலாட்டத்தையும் ஏற்படுத்தியது. தான் ஓர் அமைப்பாக இயங்க முடியாத நிலைக்கு இலண்டன் அமைப்பு தன்னைக்கொண்டு சென்றுள்ளது.

தனது அரசியல் கடமைகளை நிறைவேற்றாமல் தள்ளிப் போட்டுக்கொண்டேபோய், பொறுப்புகளைத் கட்டிக்கழித்தது. மக்கள் திரள் அமைப்புக்களில் என்ன அரசியலை முன்னிறுத்தி எவ்வாறு மக்களைத் திரட்டுவது என்பதில் வழிகாட்டத் தவறியது. வேலைமுறையை வகுத்துக் கொடுக்காமல் இருந்தது. விவசாயிகள், தொழிலாளர்களிடையே அடித்தள மட்டத்தில் ஊடுருவி இயக்கத்திற்கு உறுதியான தளம் அமைப்பதற்கு தோழர்களைத் தயார்படுத்தாமல் இருந்தது. அம்பலப்படுத்தும் பிரச்சார முறைகளை, எப்படி முறையாகத் திட்டமிட்டு நடத்துவது எனக் கற்றுக் கொடுக்கத் தவறியது. எமது இயக்க நடைமுறைகள் பாசிச ஆட்சிக்கெதிரான போராட்டமாய் இருந்தாலுங்கூட, தற்காப்பு மற்றும் இரகசிய அமைப்புகளுக்கு பாரதூரமான முக்கியத்துவம் அளிக்கத் தவறியது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீர்க்க வேண்டிய பிரச்சினைகளின் அவசர அவசியத்தை உணரத் தவறியது. சர்வதேசப் பாட்டாளி வர்க்கம் புரட்சிகர யுத்த தந்திரம் எப்படியானது, அதனுடன் நமது ஈழப்புரட்சி எவ்வாறு இணைந்துள்ளது என்று வகுத்து வழிகாட்டத் தவறியது. முழு நேர புரட்சித் தோழர்களின் அரசியல் தத்துவார்த்த மட்டத்தை உயர்த்த, முறையான அரசியல் அமைப்புப் பயிற்சிகள் தரவும், இயக்க சித்தாந்த பத்திரிகையைக் கொண்டுவரவும் தவறியுள்ளது. இதன்மூலம் தோழர்களின் தத்துவார்த்த மட்டத்தை உயர்த்தவும், அப்பிரச்சினையில் ஒருங்கிணைந்த புரிதலையும், சிரசிப்பையும் கொண்டுவரத் தவறியுள்ளது. பிரச்சினைகள் தோன்றும்போது அதைப் பார்க்காமலும் தீர்க்காமலும் விட்டுவைத்தது. உடனடியாக அவற்றைத் தீர்க்கும் அக்கறையின்றி இருந்தது, இருந்து வருகின்றது. சுய விமர்சனம், சுய தியாகம் ஆகிய பாட்டாளி வர்க்கப் பண்புகளில் மற்றத் தோழர்களுக்கு முன்னுதாரணமாக நடக்க வேண்டியவர்களே, தங்கள் நிலைப்பாடுகளையே முன்வைத்து மோசமான முன்னுதாரணத்தைத் தந்தனர். மொத்தத்தில் "LONDON அமைப்பு" அரசியல் சித்தாந்த, நடைமுறை, வழிகாட்டும் தகுதியும் நம்பிக்கையும் பெறத் தவறியது.

இலண்டன் அமைப்பு இவ்வாறு அரசியல் அமைப்புத் துறைகளில் இழைத்த தவறுகளின் சூழ்நிலைகளையும், காரணங்களையும் பார்க்க வேண்டும். இயக்கத்தைக் கட்டுவது, பொது வேலைத்திட்டத்தை வகுப்பது, இயக்கத்தின் கடந்த கால அனுபவங்களைத் தொகுத்து புதிய பணிகளை வகுப்பது ஆகியவற்றில் இயக்கம் அக்கறை காட்டாமல் இருந்தது. இவை அனைத்தையும் தீர்க்கும் முயற்சி தேவையற்றது என்று புறக்கணிக்கப்பட்டது. இலண்டன் அமைப்புக்கு இந்நிலைப்பாடே மேலோங்கி நின்றதால், சுய கௌரவம், சுய விமர்சனமற்ற போக்கு ஆகிய பாட்டாளி வர்க்க விரோத, குட்டி முதலாளித்துவப் பண்புகள் மேலோங்கி நின்றன.

ஆகவே, இத்தகைய அரசியல் அமைப்பு நெருக்கடிகளைத் தீர்த்து, தேக்க நிலைகளை உடைத்தெறிந்து இயக்கத்தை முன்னெடுத்துச்செல்ல EROS தலைமைப்பீடம் வழிவிடாததால், இப் புதிய புரட்சி இயக்கத்தைக் கட்டுவதில் ஈடுபட்டிருக்கின்றோம். EROS அமைப்பில் தோன்றியிருக்கும் அரசியல் அமைப்பு நெருக்கடியான காரணங்களையும், எமக்குக் கிடைத்த படிப்பினைகளையும் ஆய்ந்தறிந்து, அனுபவங்களைத் தொகுத்து, தேக்கநிலைகளை உடைத்துக்கொண்டு எமது புதிய புரட்சி இயக்கம் முன்னேற வேண்டுமாயின், EROS இயக்கத்தில் ஏற்பட்ட பிளவுக்குப்பின் அரசியல் தத்துவார்த்த அமைப்புத்துறையில் மார்க்சிய, லெனினிய, மாஓவின் சிந்தனைகளின் அடிப்படையில் ஓர் ஆக்கபூர்வமான மாற்றுவழியை, சரியான மக்கள் திரள் வழியை வகுத்து வரையறுப்பது இப் புதிய இயக்கத்தின் கடமையாகும்.

எவருடைய விருப்பங்களுக்கும் வெறுப்புகளுக்கும் அப்பாற்பட்டு யாருடைய உணர்வுகளையும் சாராது புறநிலையாக, தன்னெழுச்சியாக நடந்துகொண்டிருக்கும் சமுதாய இயக்கப் போக்கின் வழிமுறைகளை புரிந்துகொண்டு அந்த விதிகளைப் பிரயோகித்து, சமுதாயம் இயல்பாகவே எந்தக் கட்டத்தை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறதோ, அதை அடைய உணர்வுபூர்வமாக செயலாற்ற வேண்டும். திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். ஆகவே, புரட்சியை நடத்தி முடிப்பதற்கு என்னென்ன எந்தெந்தக் கட்டத்தில் வேண்டும் என்ற தெளிவு வேண்டும். புரட்சி நடத்துவதற்கு இயக்க அமைப்பு, மக்கள் திரள் அமைப்பு, பத்திரிகை, செய்தித் தொடர்பு, உளவு அமைப்பு, பிரச்சார அமைப்பு, ஆயுதப் போராட்டத்திற்கான தயாரிப்பு அதாவது ஆயுதங்கள், ஆள்பலம், இடம் முதலியனவும் இன்னபிற தேவைகளும் உண்டு. அதிலும் இயக்கத்தில் பொது நோக்கம், திட்டம், குறிப்பான இலக்கு, அமைப்பு (Structure) ஆகியவை முக்கியமானதாகும்.

www.tamilarangam.net

இவை அனைத்தும் புரட்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் தேவை. இந்தப் பல்வேறு அமைப்புகளும் புரட்சியின் ஒவ்வொரு குறிப்பிட்ட கட்டத்திலும் முக்கியத்துவம் வகிக்கின்றன. இவைகள் இல்லாமல் புரட்சி செய்வதென்பது சிந்தனையால் புரட்சி செய்வதாகும். இதே நேரத்தில், இவைகளில் எதை முதலில் கட்ட வேண்டும், எதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எதை முதற் பட்சமாய் எதை இரண்டாம் பட்சமாய் உருவாக்க வேண்டும் என்பதை, நிலைமைகளையும் எமது பலத்தையும், வேலைத்திட்டத்தையும், வைத்துக் கணித்துச் செயற்படவேண்டும். தேசிய, சர்வதேசிய, புரட்சிகர அனுபவங்களின் அடிப்படையிலும், மார்க்சிய, லெனினிய, மாஓ சிந்தனைகளின் வழிகாட்டுதலிலும், நமக்கிருக்கும் அனுபவம், சித்தாந்த நடைமுறை அறிவைக் கொண்டு பொது வேலைத் திட்டம் ஒன்றை வகுத்துச் செயற்படவேண்டும்.

புதிய புரட்சி இயக்கத்தின் சார்பில்
ஈழத் தோழர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்